**தலைப்பு - 264- யாழ்ப்பாண மாவட்ட செயலகம்/ கச்சேரியின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 மற்றும் 2 ஆம் பந்திகள் யாழ்ப்பாண மாவட்ட செயலகம்/கச்சேரியின் கணக்குகள் மீதான பொதுவான தகவல்களை கொண்டுள்ளதுடன் முதல் 3 பந்திகளில் கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன.

## 1. மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) நெடுந்தீவு
(ஆ) வேலனை
(இ) காரைநகர்
(ஈ) ஊர்காவற்றுறை
(உ) யாழ்ப்பாணம்
(ஊ) நல்லூர்
(எ) வலிகாமம் தென் மேற்கு
(எ) வலிகாமம் மேற்கு
(ஐ) வலிகாமம் தெற்கு
(ஒ) வலிகாமம் வடக்கு
(ஓ) வலிகாமம் கிழக்கு
(ஔ) தென்மராட்சி
(க) வடமராட்சி தென் மேற்கு
(கா) வடமராட்சி வடக்கு
(கி) வடமராட்சி கிழக்கு

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக்கணக்ககள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 26 ஆந் திகதி கணக்கீடு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய

வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டிணைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்ட செயலகத்தின் மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 550.65 மில்லியனானதுடன் அதில் மீளாய்வாண்டு இறுதிவரை ரூபா 547.89 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, தேறிய ஏற்பாட்டின் சேமிப்புக்கள் ரூபா 2.76 மில்லியன் அல்லது தேறிய ஏற்பாட்டின் 0.5 சதவீதமாகும்.

**(2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு )**

| செலவினம் | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 517.65 | 515.01 | 2.64 | 0.51 |
| மூலதனம் | 33.00 | 32.88 | 0.12 | 0.36 |
| மொத்தம் | **550.65** | **547.89** | **2.76** | **0.51** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் கிடைத்த நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு நடவடிக்கைகளிற்காக 26 அமைச்சுக்கள் மற்றும் 19 திணைக்களங்களிடமிருந்து ரூபா 4,958.97 மில்லியன் மொத்தமான ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 4,108.96 மொத்தமான தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, சேமிப்புக்கள் ரூபா 850.01 மில்லியனாக இருந்ததுடன் இது பெறப்பட்ட மொத்த ஏற்பாடுகளின் 17.14 சதவீமாக இருந்தது.

## 2.2 முற்பண கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லை

மாவட்ட செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| **விடய இலக்கம்** | **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதிகள்** | |
|---|---|---|---|---|---|---|
| | **உச்ச எல்லை** | **உள்ள படியானது** | **இழிவு எல்லை** | **உள்ள படியானது** | **உச்ச எல்லை** | **உள்ள படியானது** |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 26401 | 35.00 | 34.88 | 25.00 | 31.12 | 110.00 | 106.65 |

### 2.2.2 கட்டுநிதிக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 282/14 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கு மீதி ரூபா 421,770 ஆகும்.

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 6003/0/0/40/0 ஆம் இலக்க வைப்புக் கணக்கு மீதி ரூபா 103,405,228 ஆகும்.

### 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இந்த அறிக்கையின் பந்தி 4 இல் காணப்படுகின்ற கணக்காய்வு அவதானிப்புக்களும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது எனவும் அவற்றில் பந்தி 3:1 இலிருந்து 3:17 வரையான பந்திகளில் காணப்படுகின்ற அந்த முகாமைத்துவ அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பொருண்மை மற்றும் முக்கியமான அவதானிப்புக்களையும் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

## 3. தலைப்பு - 264- யாழ்ப்பாண மாவட்ட செயலகம்/ கச்சேரி,

### 3.1 கணக்குகளின் சமர்ப்பிப்பு

மாவட்ட செயலகம் 2015 மார்ச் 31 அளவில் கணக்காய்விற்காக வருமான கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அந்த கணக்குகள் 2015 ஒக்தோபர் 25 வரையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணாமை

மாவட்ட செயலகம் பின்வரும் ஏடுகளைப் பேணியிருக்காத பேணப்பட்டிருக்கவில்லை அதேநேரம் குறித்த சில ஏனைய பதிவேடுகளை முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|
| அடியிதழ் புத்தகத்தின் பதிவேடு | கச்சேரி கைநூல் 5:10 | பேணப்பட்டிருக்கவில்லை |
| கட்லொக் புத்தகம் | கச்சேரி கைநூல் 5:9 | பேணப்பட்டிருக்கவில்லை |
| தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 846(3), 845(1) | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை |
| குறைநிரப்பு பதிவேடு | நிதிப்பிரமாணம் 533 | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை |
| வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை | நிதிப்பிரமாணம் 1646, 1647 | ஒதுக்கப்பட்ட வாகனங்களிற்காக பேணப்பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துப்பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |

| | | |
|---|---|---|
| கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருள் மீதான நிலையான சொத்துப்பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |

**3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழான பதினைந்து பிரதேச செயலகங்களில் ரூபா 14,525,362 மொத்தமான முன்நூற்றி நாப்பத்திமூன்று கொடுக்கல் வாங்கல்கள் வேலை பூர்த்தியாக்கல் அறிக்கை, கேள்விகள், கொள்வனவு குறிப்பு, விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு, பொருளிருப்பு பதிவேட்டுச் சான்றிதழ், மேலதிக எரிபொருளிற்கான அங்கீகாரம், அனுமதிக் கடிதம் போன்ற அத்தகைய சான்றுகள் கிடைக்காமை காரணமாக திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

**3.4 ஒதுக்கீட்டுக் கணக்ககள்**

**3.4.1 பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீட்டு ஏற்பாட்டிற்கு மேலாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் ரூபா 55.16 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், நிதிப்பிரமாண இல. 66 மற்றும் 69 இன் கீழ் குறைநிரப்பு ஏற்பாடு/ சீராக்கலின் அதிகாரம் பாதீட்டு ஏற்பாடுகளிற்கு மேலாக மிகையான செலவுகளை செலவழிப்பதற்கு தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயத்திடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலகத்தின் நிர்வாக தொகுதி நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 3 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது வருடாந்த மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டிருக்காதிருந்த யாழ்ப்பாண பிரதேச செயலக கட்டிடத்தின் நிர்மாண வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட ரூபா 3 மில்லியன் தொகையை மாவட்ட செயலக நிர்வாக கட்டிட தொகுதி நிர்மாண வேலையை பூர்த்தியாக்காமல் யாழ்ப்பாண பிரதேச செயலக கட்டிடத்தின் நிர்மாண வேலைகளிற்கு அனுமதி இல்லாமல் மாற்றப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) ஐந்து மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் செய்யப்பட்ட ரூபா 3,534,503 ஆன ஆரம்ப ஏற்பாடு நான்கு சந்தர்ப்பங்களில் 9 சதவீதம் முதல் 62.3

சதவீதத்தால் குறைவடைந்திருந்த, அதேநேரம் நான்கு மீண்டெழும் ஏற்பாடு 11.5 சதவீதம் தொடக்கம் 25.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனவே, முறையான நிதி திட்டம் இல்லாமல் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஒன்பது மீண்டெழும் செலவின விடயங்களிற்கு இடையில் 9 சதவீதத்திலிருந்து 60 சதவீதம் வரை ரூபா 4,682,338 கூட்டு மொத்த தொகையான சேமிப்புகளை மாற்றுவதற்காக திருப்திகரமான காரணங்கள் தரப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 ஏனைய அமைச்சக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் கிடைத்த ஏற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைசசால், அதற்காக எடுக்கப்பட்ட மாவட்ட கொள்வனவு குழு தீர்மானத்திற்கு முரணாக கிடைத்திருந்த ஏற்பாடுகளிலிருந்து 2014 நவம்பர் 14 இல் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் ரூபா 3,299,259 பெறுமதிக்கு நூற்றி நாற்த்தியொரு தையல் மெசின்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் வழங்குநருக்கு ரூபா 479,400 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.5 கட்டுநிதிக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 371 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், உப கட்டுநிதியானது நோக்கம் பூர்த்தியான பின்னர் உடனடியாக தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 05 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 65,657 மொத்தமான உப கட்டுநிதி நோக்கங்கள் பூர்த்தியானதிலிருந்து 01 மாதம் தொடக்கம் 2 ½ மாதங்கள் வரையான தாமதங்களின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 7,500 எல்லையை விஞ்சி ரூபா 10,000 தொகையான சிறுசெலவு கட்டுநிதி முறையான அனுமதி இல்லாமல் வழங்கப்பட்டிருந்தது.

**3.6 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம், 2 ஆண்டுகளைவிட பழமைவாய்ந்த ரூபா 7,185,120 மொத்தமான பதினொரு வைப்புக்கள் மீது ந்வடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு ஆண்டிற்கு மேலாக வைப்புக் கணக்கில் இருக்கின்ற 57 ஒப்பந்த வேலைகள் தொடர்பான ரூபா 2,948,316 கூட்டு மொத்தத் தொகையான பிடிகாசை செலுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 228,521 தொகையான செலுத்தப்படாத திரண்ட பணிக்கொடை மூன்று ஆண்டுகளிற்கு மேல் நடவடிக்கை எடுக்காமல் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் பொது வைப்புக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 252,188 தொகையான செலுத்தப்படாத ஓய்வூதியம் மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக்கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா 5,255,000 தொகையான களவேலைகளிற்காக மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்தான சேகரிப்புகள் 2014 யூலை 23 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் வருமான கணக்கிற்கு எடுக்காமல் வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்தது.

(ஊ) பல்வேறு நடவடிக்கைகளிற்காக அமைச்சக்கள் மற்றும் திணைக்களங்களால் கிடைத்த ரூபா 18,039,225 தொகையான ஏற்பாடுகள் குறித்த நடவடிக்கைகளை நிறைவேற்றாமல் பொது வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது ரூபா 24,597,105 தொகையான வழி அனுமதிப்பத்திர சேகரிப்புக்கள் ரூபா 4,599,948 ஆன பதவியணியினர் சம்பளங்கள், ஊக்குவிப்பு, மேலதிகநேரப் படி, பிரயாண கோரிக்கை மற்றும் தொலைபேசி கட்டணங்கள் போன்ற செலவினங்கள் ஏற்பட்ட பின்னர் 2003 மே 07 ஆந் திகதிய என்ரீசீ/பிஓஎல்/98/22 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கடிதத்தின் பிரகாரம் வருமானக் கணக்கிற்கு அனுப்பாமல் பொது வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்தது.

(ஏ) திட்டமிடல் செயலகத்தின் வைப்புக்கணக்கு- யாழ்ப்பாண மாவட்ட செயலகம்

பின்வரும் தகவல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், அந்த தகவல்கள் 2015 செப்தெம்பர் 07 வரையும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியவில்லை.

(i) 2013 சனவரி 01 இல் உள்ளவாறான பொது வைப்புக் பேரேட்டில் காட்டப்பட்ட ரூபா 8,993,916 ஆன வைப்பு கணக்கு மீதிகளின் விபரங்கள் சீஐஜீஏஎஸ் அச்சுத்தாளில் கிடைத்திருக்கவில்லை.

(ii) மேற்குறிப்பிட்ட வைப்புக் கணக்கில் ரூபா 803,977 ஆன மீதிகளின் விபரங்கள் 2013 திசெம்பர் 31 இல் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கூற்றில் இது காட்டப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 96,151 தொகையான முத்திரை வரி அறவீடு மற்றும் உழைக்கும் போதே செலுத்தும் வரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு பதிலாக மூன்று மாதங்களிற்கு மேலாக பொது வைப்புக் கணக்கில் இருந்தது.

## 3.7 அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக்கணக்கு

26401 ஆம் இலக்க அரச உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்குகள் தொடர்பில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக் கூற்றுக்களின் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் இலக்க அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பதவி வறிதாக்கப்பட்ட 07 உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வுபெற்றோர் என்போரிடமிருந்து பெறவேண்டிய ரூபா 442,823 நிலுவையாகவிருக்கின்ற மீதியினை அறவிடுவதற்கோ அல்லது சீராக்கல்கள் செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படிருக்கவில்லை.

(ஆ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் இடமாற்றம் பெற்றிருந்த 03 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,796,306 கூட்டு மொத்தத் தொகையான ஆதன மற்றும் இடர் கடன்களின் நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகளின் அறவீடு மீதான பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 17,139,076 கூட்டு மொத்தத் தொகையான கடன் முற்பணக் கொடுப்பனவுகள் கட்டுநிதி பெறாமல் செய்யப்பட்டிருந்தது.

**3.8 கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்**

**3.8.1 செயல்நடவடிக்கை திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்ட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு மீளாய்வாண்டு தொடக்கத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8.2 வருடாந்த கொன்வனவுத் திட்டம்**

2014 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு திணைக்களச் சுற்றறிக்கையின்படி வருடாந்த கொள்வனவுத் திட்டம் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**3.9 சொத்துக்ள் முகாமைத்துவம்**

மாவட்ட செயலகத்தின் சொத்துக்களின் கணக்காய்வு தெரிவு செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த கணிப்பீட்டுச் சபை நடாத்துதல்

(i) நிதிப் பிரமாணம் 757 இன் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கணிப்பீட்டுச் சபையின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் மற்றும் செய்யப்பட்ட ஏனைய சிபாரிசுகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) யாழ்ப்பாண மாவட்டத்தில் 435 கிராம சேவகர் அலுவலகங்களிலுள்ள களஞ்சியங்கள் பொருட்கள் மீதான வருடாந்த மெய்மையாய்வு மீளாய்வாண்டிற்கான மாவட்ட செயலகத்தால் நியமிக்கப்பட்ட கணிப்பீட்டுச் சபையால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏழு பிரதேச செயலகங்களின் 231 கிராம சேவகர் அலுவலகங்களிலுள்ள களஞ்சிய பொருட்கள் நிதிப்பிரமாணம் 756(2) இற்கு முரணாக உரிய பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களை கொண்டிருக்கின்ற சபையால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்தது.

(எ) மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்கு ஒதுக்கப்பட்ட 48 உத்தியோகபூர்வ வாகனங்களின் பெறுமதி பெறுமதியிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடமையற்றிருந்த சொத்துக்களின் முறையற்ற பாவனை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

காரைநகர் பிரதேச செயலகத்தின் அலுவலக கட்டிடம் 2013 ஆம் ஆண்டின் போது தனியார் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணியின் உரிமையாண்மை பிரதேச செயலகத்திற்கு சொந்தமாகவிருக்கவில்லை. இது தொடர்பில் இந்த அறிக்கை திகதிவரை காணியின் உரிமையாண்மைய முறையாக்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடத்தின் பெறுமதி வரலாற்று கிரயத்திலோ / புத்தக பெறுமதியிலோ பரீட்சிப்பதற்கு கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் தீர்க்கப்படாத பொறுப்புக்களும் ஒரு வருடத்திற்கு குறைவாகவருகின்றதும் ரூபா 1,787,013 ஆகும். எவ்வாறாயினும், நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம், கடப்பாடுகள் ஏற்பட்டிருக்கவில்லை.

## 3.10 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | தொகை ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| (i) நிதிப்பிரமாணம் 94 | 1,787,013 | பொறுப்புக்களிற்காக சுதந்திரமான உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 115 | 80,890 | முன்னைய ஆண்டு செலவினங்கள் அதிகாரம் இல்லாமல் செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | | |
| (i) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கம் | - | மாவட்ட செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களின் 39 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு ஆறு மாதங்களிலும் பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்கம் | 3,629,762 | பதினைந்து பிரதேச செயலகங்களிற்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) திறைசேரி சுற்றறிக்கைகள் | | |
| 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்கம் | | மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.11 உள்நாட்டு நிதியளித்தலின் கீழான செயற்திட்டங்களின் அமுலாக்கல்

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது வெளிப்பட்ட செயற்திட்டங்கள் தொடங்காமல் கைவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதம் என்பன கீழே தரப்படுகின்றன.

(அ) தொடங்காமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

மாவட்ட செயலகம் பின்வரும் செயற்திட்டங்களை தொடங்கியிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | பூர்த்தியாக்க வேண்டிய திகதி | தொடங்கப்பட்டிராமைக்கான காரணம் (சுருக்கமாக) |
|---|---|---|---|
| | ரூபா | | |
| ஆண்கள் விடுதி | 5,000,000 | 2014 | ஒதுக்கீடு மீளப்பெறப்பட்டமை |
| பெண்கள் விடுதி | 5,000,000 | 2014 | ஒதுக்கீடு மீளப்பெறப்பட்டமை |

(ஆ) செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதிலுள்ள தாமதம்

மாவட்ட செயலகத்தால் நான்கு மாடிகள் நிர்வாக கட்டிடதொகுதியின் நிர்மாணத்தின் நிறைவேற்றலிலுள்ள தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தின் நிர்வாக கட்டிடதொகுதியின் நிர்மாண வேலைகளிற்காக ரூபா 12 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்த நிர்மாண வேலைகளின் கட்டம் -வி இல் பௌதீக வேலைகளில் 60 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், கருத்திற்கொள்ளவேண்டிய தாமதங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. கட்டிடத்தின் நிர்மாண வேலைகளின் தொடக்கம் 2011 இல் தொடங்கப்பட்டதுடன் தொடங்கிய ஆண்டிலிருந்து ரூபா 53.69 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இந்த அறிக்கை திகதி வரையும் ரூபா 53.65 மில்லியன் தொகை செலவழிக்கப்ட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| ஆண்டு | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2011 | 19,500,000 | 19,500,000 |
| 2012 | 5,000,000 | 4,958,478 |
| 2013 | 17,192,000 | 17,192,000 |
| 2014 | 12,000,000 | 12,000,000 |
| | 53,692,000 | 53,650,478 |

### 3.12 செயலாற்றல்

2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் செயன்முறை மீதான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத முக்கிய செயற்பாடுகள்**

மாவட்ட செயலகத்தின் பின்வரும் முக்கிய செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாததுடன் பல சந்தர்ப்பங்கள் கீழே வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(i) அரசாங்க உத்தியோகத்தர்களிற்காக அவர்களுடைய நிலையில் தங்கியிருத்தலிற்றான நடுத்தர பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

(ii) இடர் முகாமைத்துவ சேவைப் பிரிவால் கிராம மட்டத்தில் குழுவின் நியமனம்

### 3.13 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடைசி ஒன்றரை ஆண்டுகளிற்கு மேலாக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கங்களால் நியமிக்கப்பட்ட அத்துமீறிய நபர்களால் மாவட்ட செயலகம் மற்றும் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம் என்பவற்றிற்கு வருகை தந்திருந்த பொது மக்களிடமிருந்து சைக்கிள், டோட்டார் சைக்கிள் தரிப்பிடங்களிற்காக ஒரு நாளிற்கு ரூபா 2 முதல் ரூபா 10 வரை பல்வேறு வீதங்களில் வாகன தரிப்பிட கட்டணங்களை அறவிடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

### 3.14 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தால் பதியப்பட்ட சில் கொடுக்கல் வாங்கல்கள் வழமைக்கு மாறாக இருந்தது. அத்தகைய பல சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(i) மதிப்பீட்டில் நிதிஏற்பாடுகள் இல்லாமல் மாவட்ட செயலகத்திற்காக நெஸ்ரீ மற்றும் நெஸ்ரீ கப் கொள்வனவு செய்வதற்காக ரூபா 78,995 ஆன தொகை ஏற்பட்டிருந்ததுடன் நலன்புரி நிகழ்ச்சித்திட்ட செலவின குறியீட்டிற்கு கொடுப்பனவுகள் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ii) 2010 செப்தெம்பர் 01 ஆந்திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாக இறுதி கொடுப்பனவு மீதான வட்டி, கடன் மாற்றங்கள்/ கடன் பகிர்வுகள், ஐடிடி, ஐடிடி வரிகள் மற்றும் எல்லையை மீறியதான் தொலைபேசிப் பயன்பாடு என்பனவாக உத்தியோகத்தர்களின் கையடக்க மற்றும் வதிவிட தொலைபேசி கட்டணங்கள் என்பவற்றிற்காக ரூபா 50,772 ஆன தொகை மீளளிக்கப்பட்டிருந்தது.

(iii) ஒதுக்கப்பட்ட வாகனத்திற்காக மேலதிக எரிபொருள்

மாவட்ட செயலாளருக்கு வாகனமொன்று ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 27,360 மாதாந்த எரிபொருள் படியும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மேலதிகமாக ரூபா 102,060 பெறுமதிக்கான 849 லீற்றர் மற்றும் ரூபா 198,394 பெறுமதிக்கான 1645 லீற்றர் எரிபொருள் 2008 யூன் 28 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக செயலாளர் அக்கறையிலிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் முறையே பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் பொது நிர்வாக அமைச்சு மற்றும் வதிவிட அலுவல்கள் அமைச்சிற்காக கிடைத்த ஏற்பாடுகளிலிருந்து இந்த வாகனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 3.15. நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன

13 ஆண்டுகள் தொடக்கம் 27 ஆண்டுகள் வீச்சிலான காலப்பகுதியில் பல்வேறு காரணங்களிற்காக பெறவேண்டிய ரூபா 2,403,388 கூட்டுமொத்த தொகையான நட்டங்கள் ஒதுக்கீட்டு கணக்கில் காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பில் தெளிவாக்குவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.16. தீர்வுகாணப்படாத கணக்காய்வு பந்திகள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பின்தொடர் நடவடிக்கை இறுதியாக்கப்பட்டிருக்காத மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வு பந்திகளிற்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு**

| ஆண்டு | பந்தி இலக்கம் | தொடர்பின் கீழான விடயம் (தெளிவாக மற்றும் சுருக்கமாக தந்தவை) |
|---|---|---|
| 2013 | 1.14 | தனியார் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவைகளின் வேலை தொடர்பில் கொடுப்பனவாக முன்னாள் மாவட்ட செயலாளர் உள்ளடங்கலாக 27 உத்தியோகத்தர்களிற்கு ஊக்குவிப்பு படியாக 2012 மே 02 இல் ரூபா 3,425. மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பயணிகள் கப்பல் சேவை 2099 மார்ச் மாதத்திலிருந்து இல்லாதிருந்ததுடன் அந்த வேலைகள் தொடர்பான கொடுப்பனவுகள் சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய படிகளிற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்களிற்கு ஒரு நாளிற்கு ரூபா 500 வீதத்தில் ஏற்கனவே செய்யப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது தனியார் பயணிகள் கப்பல் தொடர்பில் எத்தவொரு உத்தியோகத்தரும் விசேட வேலைகள் செய்யவில்லை. எவ்வாறாயினும், 2015 யூன் 29 தொடக்கம் 2015 ஒக்தோபர் 21 வரையான காலத்தின் போது அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 648,200 கூட்டு மொத்த தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. |
| 2013 | 1.11 (ஆ)(i) | மாவட்ட செயலகத்துக்கு சிவில் பொறியியலாளர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் மாவட்ட செயலகத்தின் கருத்தரங்கு மண்டபத்தின் புனர்நிர்மாண மேற்பார்வைக்காக 2013 யூன் 10 இல் திணைக்கள கொள்வனவு குழுவால் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த இரண்டு வெளித்தரப்பு உத்தியோகத்தர்களிற்கு பொது வைப்புக் கணக்கிலிருந்து ரூபா 180,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3.17. மனிதவளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 46 | 46 | - | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 28 | 18 | 10 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 790 | 871 | - | 81 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 198 | 197 | 01 | - |
| | மொத்தம் | 1,062 | 1,132 | 11 | 81 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகம் மீளாய்வாண்டு இறுதியளவில் 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலகமானது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர்களாக சேர்க்கப்பட்ட 81 மிகையான பதவியணிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அங்கீகாரம் பெறுவதற்கு தவறியிருந்தது.

*M*